# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.

# CC No. 134/2019

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 01 ஆம் நாள் புதன் கிழமை அரசு தரப்பு சாட்சி–06, திரு.ஆறுமுகம் என்பவரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 56 வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.செ.சாஸ்தா குமரன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ஆறுமுகம் | வயது | : | 60 /26 |
| த.பெ. | : | மொட்டையன் | தொழில் | : | கூலி |
| ஊர் | : | பிலாஞ்சேரி | நிலை | : | LW06/ PW06 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

**(3 வது எதிரி ஆஜர். 1, 2 எதிரிகள் ஆஜரில்லை. அவர்கள் தரப்பு வழக்கறிஞரால் மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது)**

**முதல்விசாரணை:**

நான் பிலாஞ்சேரியில் வசித்து, கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் என்னுடையது எதுவும் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் கு/வி.**

ஆஜர் எதிரியைத் தெரியும். அவர் எனது ஊரைச் சேர்ந்தவர் ஆவார். கடந்த 24.07.2017 ம் தேதி பகல் 01.00 மணியளவில், நானும் நாகராஜன் என்பவரும் எங்கள் ஊர் அத்தில்ஏரி அருகில்

நின்றிருந்தபோது, ஜெயங்கொண்டம் போலீசார் அங்கு வந்து, காவல் நிலைய குற்ற எண் 250/2017 என்ற வழக்கு சம்மந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு, படம் வரைந்து, எழுதிக்கொண்டார்கள் என்றும், அவர்கள் எழுதிக்கொண்ட பேப்பரில் நானும் நாகராஜன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரி என் ஊரைச் சேர்ந்தவர் என்பதால், அவரை இந்த வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காக, பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை என்று எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை

**மறு விசாரணை – இல்லை**

/ உண்மை நகல் /

ஒம்/-ப.கனிமொழி,

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,

ஜெயங்கொண்டம்.